பார்த்து, அவற்றைக் கணக்கெடுத்து, அந்த மக்களுக்குரிய நிவாரணப் பொருட்களை வழங்கியிருக்கின்றோம். உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாடுகள் அதிகமாக இறந்திருக்கின்றன என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. அப்படியொரு குறிப்பு எங்கள் மாவட்டத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான தகவலைத் தெரிவிக்க வேண்டாமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மீதியுள்ள கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, எந்தளவு அதிகம் வேண்டுமோ அவற்றை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(எ) கல்லூரிகளில் படிக்கும் ஆதி திராவிட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படாதது, நெய்வேலி, மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டும் திட்டத்தைக் கைவிடக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக நான் இரண்டு நாட்களாக வைத்திருக்கிறேன். நான் இருக்கின்றபோது அவர் இருப்பதில்லை. அவர் இருக்கின்றபோது நான் இருப்பதில்லை. இதுவொரு பெரிய பிரச்சினை. ஆனால், அவரைப் பொறுத்தவரையில், அது சிறிய பிரச்சினை. அது என்னவென்றால், கல்லூரிகளில் படிக்கின்ற SC/ST மாணவர்களுக்கு 2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதியுதவி கிடைக்கவே இல்லை. நானும் இந்த அவையில் Hon'ble Minister அவர்களிடம் சொல்லிப் பார்த்தேன். அவர்கள் பாவம். பெரிய, பெரிய மந்திரிகளே நிதி வாங்க முடியாது. அவர்கள் என்ன செய்வார்கள், பாவம். அவர்கள் விட்டுவிட்டார்கள். Finance Minister அவர்களிடமும் சொல்லிப் பார்த்தேன். அவரிடத்திலும் நான் இரண்டு வருடங்களாகப் பேசி பார்த்தேன். இந்த இரண்டு வருடங்களாக நிதி இல்லாததால், அந்த மாணவர்களுக்கு சோறு போடமாட்டேன் என்கிறார்கள். சோறு போடமாட்டேன் என்று சொன்னால், hostel–லில் கலாட்டா வந்துவிடும். அதற்குப் பின்னர்

2019 ஜனவரி 8] [திரு. துரைமுருகன்]

communal பிரச்சினைகள் வந்துவிடும். மத்திய சர்க்கார் பணம் கொடுக்கவில்லை. ஆகையினால் நாங்களும் கொடுக்கவில்லை என்று சொன்னால் எப்படி? மத்திய சர்க்கார் கொடுக்கிறது, கொடுக்கவில்லை. அது பரவாயில்லை. ஆனால், இந்தச் சர்க்காருக்கு இது சாதாரண விஷயம். "மலை முழுங்கி மகாதேவனுக்கு, கதவு ஒரு அப்பளத்துண்டு" என்று சொல்வார்கள். அதேமாதிரி, நிறைய வருமானமுள்ள இந்தச் சர்க்காருக்கு இது ஒன்றும் பெரிதல்ல. இந்தப் பணத்தைக் கொடுத்துவிடுங்கள். பின்னர், நீங்கள் reimbursement செய்துகொள்ளுங்கள். அதற்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆகையினால், மத்திய அரசாங்கத்திடமிருந்து நீங்கள் நிதியை வாங்கும் வரையில், இதற்கான நிதியை நீங்கள் உடனடியாகக் கொடுக்க வேண்டும். ஏன் இதை மட்டும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன் என்று சொன்னால், இரண்டு பேரிடத்தில் சொல்லி பிரயோஜனம் இல்லை. ஆனால், நிச்சயமாக இவர் செய்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நிச்சயமாகப் பாருங்கள், அடுத்த முறை நன்றி சொல்கின்றமாதிரி செய்துவிடுவார். இது ஒரு முக்கியமான பிரச்சினை. இரண்டாவது பிரச்சினை, நெய்வேலியில் 3–வது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதற்காக 37 கிராமங்களில் 13,500 ஏக்கர் நிலங்களை எடுக்கின்றார்கள்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, எனக்கு இன்று நேரம் இல்லை. (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உள்ளபடியே சொல்கின்றேன், எல்லா உறுப்பினர்களுக்கும் நீங்கள் கொடுக்கின்ற மாதிரி freedom, வேறு யாரும் கொடுக்க முடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, கொடுக்கின்றேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am verymuch thankful to you. 3–வது சுரங்கம் வெட்டுவதற்காக 37 கிராமங்களில் 13,500 ஏக்கர் நிலங்களை எடுக்கின்றார்கள். அந்தப் பகுதியில் உள்ள எல்லாக் கட்சிக்காரர்களும் அதை வெறுக்கின்றார்கள். தயவுசெய்து இந்தத் திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.